DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.3/2020**
**CNR.No: TNTH06-000015 -2020 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சாய்ராம்** | Town | **சின்னமனூர்** |
| Father's Name | : **வெங்கட்ராமன்** | Taluk | : **உத்தமபாளையம்** |
| Age | : | **DW1** | |

நாள் : 15.04.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் நான் மூன்றாம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் ஒன்றாம் பிரதிவாதியாகிய எனது அக்கா ரமாவிற்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது அக்கா ரமாவிற்கும், எனக்கும் தற்போது நல்ல உறவு நிலை தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்து 13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் படி கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோருக்கு சி செட்யூல் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான் .கிருஷ்ணமூர்த்திக்கு பி ஷெட்டில் சொத்தும் ராமச்சந்திரனுக்கு C ஷெடியூல் சொத்தும் ஒதுக்கப்பட்டது .இதன் மேலே நான் சொல்லிய டி ஷெடியில் மற்றும் சி ஷெடியூல் சொத்துக்கள் சேர்ந்ததுதான் வழக்கு சொத்துக்கள் என்றால் சரிதான் . என் தந்தை பெயர் கே.எஸ்.வெங்கடேஸ்வரன் என்கிற வெங்கட்ராமன் என்றால் சரிதான். என் தந்தையின் உடன் பிறந்தவர்கள் தான் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் ராமச்சந்திரன் என்பவரும் என்றால் சரிதான்.

2) என் தந்தையின் உடன்பிறந்தவரான ராமச்சந்திரன் மனநிலை சரியில்லாதவர் என்றால் சரிதான், ஆனால் அது பிறப்பினால் ஏற்பட்டதல்ல இடையில் ஏற்பட்ட பிரச்சனையாகும். 1964 ஆம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது ராமச்சந்திரன் மனநிலை சரியாக இருந்ததா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி ராமச்சந்திரன் எந்த ஆண்டு முதல் மனநிலை சரியில்லாமல் ஆனார் என்பது பற்றி எனக்கு வருடம் சரியாக தெரியாது என்றால் ஆமாம் குறிப்பாக தெரியாது. ராமச்சந்திரனுக்கு

மனநிலை சரியில்லை என்பதால் அவருக்கு திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்றால் இல்லை, திருமணமாகி விவாகரத்து பெற்றார்,அதன் பிறகு தான் மனநிலை சரியில்லாமல் இறந்தார், அவருக்கு குழந்தை எதுவும் இல்லை. எனது முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகளை எனது வழக்கறிஞரிடம் நான் தான் தெரிவித்தேனா என்றால் ஆமாம். எனக்கு தமிழ் நன்றாக எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான்.

3) எங்கள் தரப்பு எதிர்வழக்குரை சங்கதிகளையும் நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேனா என்றால் நானும், எனது அக்காவும் சேர்ந்து சொன்னோம். ன எனது முதல்விசாரணையில் பத்தி 4ல் ராமச்சந்திரன் திருமணமாகாமல் இறந்துவிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதேபோல எங்கள் தரப்பு எதிர்வழக்குரை பத்தி 11லிலும், இராமச்சந்திரன் திருமணமாகாமல் இறந்துவிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதனால் இராமச்சந்திரனுக்கு திருமணமாகி விவாகரத்து ஆகிவிட்டதாக தற்போது கூறுவது வழக்கிற்காக கூறும் தவறான சாட்சியம் என்றால் சரியல்ல, உண்மையில் இராமச்சந்திரன் திருமணமாகி விவாகரத்து பெற்ற நபராவார். இராமச்சந்திரனுக்கு திருமணமாகி விவாகரத்து ஆகிவிட்டதாக கூறுவது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) இராமச்சந்திரன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இராமச்சந்திரன் திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்பதால் அவரது உடன் பிறந்த சகோதரர்கள் தான் இந்து வாரிசு உரிமை சட்டப்படி அவரது வாரிசுகள் என்றால் எனக்கு சட்டம் பற்றி தெரியாது. இராமச்சந்திரன் இறந்தபோது அவரது சகோதரர்களான எனது தந்தை வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமனும், கிருஷ்ணமூர்த்தியும் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரிதான். நானும், வாதியும், 1ம் பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். தற்போதும் எனது தந்தை வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன் உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். 02.03.2011ம் தேதியில் எனது தந்தையின் தம்பி கிருஷ்ணமூர்த்தி வழக்கு சொத்தில் அவருக்குரிய பாகத்தை எனது தகப்பனார் பெயரில் விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் எழுதிக்கொடுத்தது உண்மை தான், ஆனால் அவர் எழுதிக்கொடுத்த சொத்துக்களின் விகித அளவுகள் தவறாகும், மேலும்

இராமச்சந்திரனின் சொத்துக்களைப்பொறுத்து அவர்கள் பிரித்துக்கொண்டதும் தவறாகும்.

5) நான் இந்து வாரிசுரிமை சட்டத்தின் படி இராமச்சந்திரனின் வாரிசு அல்ல என்றால் சரியல்ல, நானும் வாரிசு தான். 13.02.1964ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது தந்தைக்கு ஒரு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது மாண்புமிகு தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் எனது அக்கா ரமா பாகப்பிரிவினை வழக்கு ஒன்று அசல் வழக்கு எண். 33/2019 என்ற வழக்கினை தாக்கல் செய்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என் அக்கா சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் அளிக்கவில்லை. மேற்படி மாண்புமிகு தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் முன்பான அசல் வழக்கு எண். 33/2019 என்ற வழக்கில் வழக்கு சொத்தாக, இந்த நிர் வழக்கின் வழக்கு சொத்தினை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 02.03.2011ம் தேதியில் கிருஷ்ணமூர்த்தி என் தந்தை பெயரில் எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணத்தில் சொத்து விபரங்கள் மற்றும் விகித அளவுகளும் சட்ட முறைப்படியே விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்றாலும், நான் வழக்கிற்காக அதனை மறுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்தில் வாதியின் சுவாதீனத்திற்கு நான் இடையூறு செய்கிறேனா என்றால் வழக்கு சொத்து வாதியின் சுவாதீனத்தில் இல்லை, நான் அதற்கு இடையூறும் செய்யவில்லை. நான் வழக்கு சொத்தில் வாதியின் சுவாதீனத்திற்கு நான் இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை வெங்கடேஸ்வரன் என்ற வெங்கட்ராமன் வழக்கு சொத்தைப்பொறுத்து வாதியின் பெயருக்கு 09.05.2019 அன்று தான ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வழக்கு சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டுள்ளது என்றாலும், வழக்கு சொத்தில் வாதியே சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை வாதி 3ம் நபருக்கு பிவாசாஆ1 ஆவணத்தின் வாயிலாக 15.06.2023 அன்று கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது சட்ட முரணான ஆவணமாகும். வழக்கு சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதனைப்பொறுத்து கிரையம் ஏற்படுத்திக்கொடுக்க வாதிக்கு முழு உரிமை உள்ளது என்றாலும், அதனால்

பிவாசாஆ 1 ஆவணம் சட்டப்படியானது என்றால் சரியல்ல.

7) 23.12.2019 ம் அன்று வழக்கு சொத்தில் வாதி அமைதியான சுவாதீனத்திற்கு நாங்கள் இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. இது தொடர்பாக 27.12.2019 ம் தேதியில் எங்கள் மீது வாதி காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் ஆமாம், ஆனால் அந்த சமயத்தில் நானும், எனது அக்காவும் ஊரிலேயே இல்லை. வழக்கு சொத்தில் வாதியின் தந்தை இருந்தார் என்றாலும், அவரை நான் அடித்ததால் தான் வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும் சரியல்ல. காவல்நிலையத்தில் நான் இதுபோன்று நடந்துகொள்ளமாட்டேன் என எழுதிக்கொடுத்ததால் தான் என் மீதான புகார் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு முன்பும் 20.10.2019 அன்று நான் இதேபோல தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. அதற்கு என் தந்தையே என் மீது புகார் அளித்தார் என்றால் ஆமாம், ஆனால் அந்த புகார் பொய்யாகும். இவ்வாறு, வழக்கு சொத்தில் வாதி அனுபவத்திற்கு நான் தொடர்ந்து இடையூறு செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எனக்கும், எனது அக்காவிற்கு எந்த விதமாக தொடர்போ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல.

8) வழக்கு சொத்தில் நாங்கள் கூட்டாக அனுபவத்தில் இருந்து வருவதாக கூறுவதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இராமச்சந்திரன் சொத்து தற்போது வரை பாகம் பிரிக்கப்படவில்லை என்பதால் அது கூட்டுச்சொத்தாக உள்ளதால் எங்களால் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக கூறுவது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை. இராமச்சந்திரன் பெயரில் உள்ள ஆவணம் எதுவும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். இராமச்சந்திரன் சொத்தில் நாங்கள் வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் உரிமை இருப்பதாக இந்த வழக்கில் எதிர் வாதம் புரிந்துவருகிறோம் என்றால் இராமச்சந்திரன் சொத்தில் அனைத்து வாரிசுகளுக்கும் உரிமை இருப்பதாகத்தான் எதிர்வாதம் புரிந்து வருகிறோம். வழக்கு சொத்தைப்பொறுத்து நாங்கள் பாகப்பிரிவினை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், தற்போது தான் இச்சொத்து தொடர்பாக தெரியவந்தது, அதனால் அதனைப்பொறுத்தும் பாகப்பிரிவினை கோர இருக்கிறோம்.

9) நான் இராமச்சந்திரனுக்கு நான் சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால்



இந்த வழக்கில் நான் பொய்யான எதிர்வாதம் முன்னெடுக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதிக்கு அவர் வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.